DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 23.01.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.20/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.2 |
| Name | : | **குணசேகரன்** |
| Father Name | : | **ராமசாமி** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 23.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**
**<u>விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(11.22.A.M):-</u>**

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், வாழப்பாடி காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகின்றேன். கடந்த 13.11.2023-ம் தேதி நான் ஏற்காடு காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது முன்னதாக ஏற்காடு அரசு மருத்துவமனையிலிருந்து சுந்தர்ராஜன் என்பவர் அடிபட்டு கிடப்பதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஏற்காடு காவல் நிலைய தலைமை காவலர் 1166 ஸ்ரீனிவாசன் என்பவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த சுந்தர்ராஜன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து ஆஜர்படுத்திய வாக்குமூலத்தை பெற்று பரிசீலனை செய்து குற்ற எண்.265/2023, ச/பி. 294(பி), 324, 506(2)

இதச–வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அன்றைய தினமே வழக்கின் சாட்சியான முருகன், திலகன், இராஜேந்திரன், ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான பாலகிருஷ்ணன், வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். இவ்வழக்கு சொத்தினை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் அன்றைய தினம் மதியம் 01.00 மணியளவில் வழக்கு சொத்தான கொடுவாள் ஒன்றினை படிவம் 95–ன் மூலம் கைப்பற்றினேன். **மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், படிவம் 95 அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. **வழக்கு சொத்தான கொடுவாள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் காயமடைந்த புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமையந்தி ராணி என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றேன். **அக்காயச்சான்றானது அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சிகிச்சையில் இருந்த புகார்தாரரிடம் வாக்குமூலம் பெற்றது குறித்து சம்பவ இட சாட்சியான ஸ்ரீனிவாசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணை முடிவடைந்து கனம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான நான் சம்பவம் இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமல் வழக்கின் புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், நானே வழக்கிற்காக தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில்,

சொன்ன இடத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், வழக்கு சம்பவம் குறித்து எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

2. வழக்கானது புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.38.A.M.)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.01.23 11:39:10 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.